Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/213/2024** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW 2 / LW 2** |
| **Name** | .. | திரு. கதிர்வேல் |
| **Father's/Husband's Name** | .. | திரு. செல்வராஜ் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **45** |

**Date: 10/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண். 2, ஆல் இந்தியா ரேடியோ நகர், எர்ணவாவூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் அசோக் லேலாண்டில் வேலைபார்த்து வந்தேன். மிசின் ஆப்பரேட்டராக வேலை பார்த்தேன். எனது வருமானம் சுமார் 20 ஆயிரம் இருக்கும். சிறுவயதில்

என்னுடைய தாத்தா பாட்டி என்னை பார்த்துக்கொண்டார்கள். உடன் பிறந்தவர்கள் ஒரு அக்கமா மற்றும் ஒரு தம்பி. 05.03.2021 அன்று எனக்கு திருமணம் நடந்தது.

2. என்னுடைய மனைவி பண மோசடி என்று புகார் கொடுத்தார். எனது தாய்மாமன் கார்த்திகேயன் என்னிடத்தில் பணம் மோசடி செய்துவிட்டார். எனது தாய்மாமா தான் என்னுடைய ATM கார்டை உபயோகித்து வந்தார். பணத்தை எல்லாம் அவரே எடுத்துக்கொண்டார்.
போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.
எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :-

3. நீங்கள் எந்த வருடம் அசோக் லேலாண்டில் வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் 2001ம் வருடம் முதல் வேலை பார்த்து வருகிறேன். உங்களது சொந்த ஊர் என்னவென்றால் சென்னை தான். உங்களது தாய் மாமா மற்றும் உங்களது தம்பி மண்ணார்குடியில் உள்ளார்கள் என்றால் சரிதான்.

4. உங்களது ATM கார்டை நீங்களாக தனியாக பணம் எடுக்க தெரியாது என்றால் சரிதான். கம்பெனியில் வேலை செய்பவர்கள் பணம் எடுத்துக்கொடுப்பார்களா அல்லது உங்களது மனைவி எடுத்துக்கொடுப்பாரா என்றால் என்னுடைய மனைவி தான் ATMல் எனக்கு பணம் எடுத்துக்கொடுப்பார். உங்களது மனைவி உங்களது தாய் மாமா மற்றும் வெங்கடேசன் ஆகியோர் பணம் எடுத்துவிட்டதாக சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. அப்படி ஒரு சம்பவம் ஏதும் எதுவும் நடக்கவில்லை என்றாலும் உங்களது மனைவி உங்களிடம் சொல்லியதால் நீங்கள் இந்நீதிமன்றத்தில் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

6. 2016ல் உங்களது மனைவி உங்களை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். உங்களுக்கு உங்கள் தாய் மாமா தான் திருமணம்செய்து வைத்தார் என்றால் சரிதான். செலவு என்னுடைய செலவு. உங்களது திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தீர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய தாய் மாமா தான் செலவு கணக்கை எழுதி வைத்திருந்தார். நீங்கள் அசோக் லேலாண்ட் கம்பெனியில் வேலை செய்கிறீர்கள் உங்களுக்கு நல்ல வருமானம் உண்டு என்பதால் தான் உங்களது மனைவி உங்களை திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை.

7. 2020ம் வருடம் கொரான சமயத்தில் உங்களது மனைவி மீது உங்களது ATM கார்டை பிடிங்கி கொண்டு உங்களுக்கு செலவிற்கு காசு கொடுக்கவில்லை என்றும் உங்களுக்கு சாப்பாடு போடவில்லை என்றும் உங்களது தாய் மாமா மற்றும் உங்களது தம்பியும் எண்ணூர் காவல் நிலையத்தில் உங்களது மனைவி புகார் கொடுத்துள்ளார் என்றால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. உங்களது மனைவிக்கு பயந்து கொண்டு நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. உங்களுக்கு திருமணம் நடந்த 2020ல் இருந்து உங்களது ATM கார்டை உங்களது மனைவி தான் பயன் படுத்திவந்தார் என்றால்

சரிதான். இந்த வழக்கில் உங்களது தாய் மாமாவிற்கும் உங்களது தம்பிக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் உங்களது மனைவி இப்படி தான் சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தாரா என்றால் இல்லை.

9. உங்களது மனைவி புகார் கொடுத்தவாறு எந்த ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் புகார் தாரர் என்னுடைய மனைவி என்பதால் அவருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நீங்கள் 2001 ல் சென்னைக்கு வந்து விட்டீர்கள் என்றாலும் அதனால் உங்களது தாய் மாமா மண்ணார் குடியில் தான் இருந்தார் என்றாலும். உங்களது ATM கார்டை உபயோகிப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல 10 வருடமாக என்னுடைய தாய் மாமா தான் ATM கார்டை வைத்திருந்தார். உங்களுடைய தாய் மாமா மண்ணார் குடியில் தான் இருந்தார் என்றாலும் நீங்கள் உங்களுடைய நண்பர்கள் மூலம் உங்களது ATM கார்டை பயன்படுத்திவந்தீர்கள் என்றாலும் நீங்கள் திருமணத்திற்கு பின்பு உங்களது மனைவியின் மூலம் ATM கார்டை பயன்படுத்தினீர்கள் என்றாலும் சரியல்ல. 2021ல் இந்த ATM கார்டுகாகத்தான் உங்களுக்கும் உங்களது மனைவிக்கும் சண்டை வந்த்து என்றால் சரியல்ல. உங்களது அப்பா 1995ல் இறந்து விட்டார் என்றாலும் அம்மா 2008ல் இறந்துவிட்டார்கள் என்றாலும் 2006ல் எழுப்பு முறிவு ஏற்பட்டு தாய் மாமா தான் உங்களை பார்த்தார் என்றால் சரிதான் என்னுடைய பணத்தை வைத்து தான் அவர் என்னை பார்த்துக்கொண்டார்.

10. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் கிடையாது என்றாலும் என்னுடைய மனைவியின் பேச்சை கேட்டு தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர்,**
**திருவொற்றியூர்**

Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/213/2024** |
| **Sessions** | **:** | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | **:** | **PW 3 / LW3** |
| **Name** | **..** | திரு. N. தங்கராஜன் |
| **Father's/Husband's Name** | **..** | திரு. S. நாராயணசாமி |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **76** |

**Date: 10/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண். 2, ஆல் இந்தியா ரேடியோ நகர், எர்ணவாவூர்என்றமுகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர்எதிரியை என்க்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. (**ஒப்புதல் வாக்கு மூலத்தில்**

உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று சாட்சி மறுக்கிறார்). காத்திக்கேயன், நாகலட்சுமி, விஜி என்ற விஜயலட்சுமி அட்வகேட், R. சம்பத்குமார் அட்வகேட், S. வெங்கடேசன், ராமானுஜம், ஜலஜகுமாரி மற்றும் பிரேம்குமார் ஆகியோர் கதிர்வேல் என்பவரின் சம்பளத்தை எடுத்து செலவு செய்துவிட்டர்கள்.

2. கதிர்வேலின் தாயார் இறந்த பிறகு அவர் வீட்டில் இருந்த ஆவணத்தை மேற்படி கார்த்திகேயன் எடுத்துச்சென்றுவிட்டர். கதிர்வேலின் தகப்பனார் செல்வராஜ் என்பவர் அவருடைய சுய சம்பாத்தியத்தில் சம்பாதித்த பணத்தை கொண்டு பல்வேறு இடங்களில் 1. டோல்கேட் அருகே வீடு மற்றும் மனை, குடியிருப்புகள் ஆகியவை குடியிருப்பு லாயக்கற்ற ஒன்றாகும். 2. ஜோதி நகரில் உள்ள தரிசு மனை. 3. நாகப்பட்டினம் வெளிபாளையத்தில் வீடு மனை, 4. காட்டாங்குளத்தூரில் தரிசு மனை. 5. அரக்கோணம் அருகே ராஜாளி கடற்படை இடத்திற்கு அருகே வெளிப்புறம் 2 ஏக்கர் தரிசு நிலம் மற்றும் மண்ணார் குடியில் உள்ள அவருடைய தகப்பனாருக்கு சொந்தமான பொதுவில் பிரிபடாத சொத்துக்கள் கார்த்திகேயன் மற்றும் விஜி வசம் உள்ளது.

3. கொரானா காலத்தில் எதுவும் கொடுக்காமல் சுமார் 70 லட்சம் பணம் மோசடி செய்துள்ளார்கள். இது சம்பந்தமாக 08.10.2022 அன்று எண்ணூர் காவல் நிலைய ACP அவர்களால் விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்ப்பட்டது. தவிற்க இயலாத காரணங்களால் 10.10.2022ல் விசாரணைக்கு ஆஜரான சமயம் மேலே குறிப்பிட்ட நபர்களில் வெங்கடேசன் என்பவர் மட்டும் விசாரணைக்கு ஆஜரானார்.

4. அது சமயம் மேற்படி வெங்கடேசன் இது குடும்ப விவகாரம் என்றும் தனது தாய் மாமாவான கார்த்திகேயன் என்பவர் எங்களை மண்ணார்குடி அழைத்து வந்து சமரசம் பேசி குடும்ப பிரச்சனையினை தீர்த்துகொள்ளலாம் என்று கூறிய நிலையில் நான் ACP அவர்களிடம் மேற்படி கார்த்திகேயனை இங்கு வந்து ACP முன்னிலையில் சமரசம் பேசலாம் என்று கூறிய போது ACP அதனை மறுத்து எனது மகளை மண்ணார்குடி சென்று சமரசம் பேசி முடித்துக்கொள்ள அறிவுறுத்தி அதன் அடிப்படையில் நாங்கள் 16.10.2022 அன்று மாலை மண்ணார்குடி சென்று சமரசம் பேச முயற்சி செய்த நிலையில் மேற்படி கார்த்திகேயன் தனக்கு உள்ள செல்வாக்கினை பயன்படுத்தியும். மேலும்கூலிப்படை ஆட்களை நியமித்து எங்களை குடும்பத்துடன் கொலை செய்ய முயற்சி செய்த நிலையில் எனது பேரன் அங்கு இல்லாத நிலையில், எனது மகள் கடுமையாக தாக்கப்பட்டு மண்ணார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 3 தினங்கள் சிகிச்சை பெற்று திரும்புயுள்ளார். அது சமயம் 17.10.2022 அன்று மண்ணார்குடி நகர காவல் துறையினர் மருத்துவமனை வந்து எனது மகளிடம் வாக்கு மூலம் பெற்று CSR நகல் தந்துள்ளார். CSR நம்பர் எனக்கு ஞாபகமில்லை. மேலும் எனது மகள் சிகிச்சை பெற்று திரும்பிய பின்பு மண்ணார்குடி நகர காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரான போது காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி கார்த்திகேயனிடம் நீங்கள் ஒரு அரசு பதவியில் இருக்கிறீர்கள் உங்கள் மீது வழக்கு பதிந்தால் எங்களது பதவிக்கு ஆபத்து வரும் என்றும் எங்களிடம் கூறியிருந்தார். மேற்படி சம்பவத்தை காதும் காதும் வைத்தார் போல் முடித்து இருப்போம் என கூறி FIR பதிவு செய்யாமல் மேற்படி கார்த்திகேயனிடமிருந்து டோல்கேட், ஜோதிநகர், வெளிப்பாளையம் மனை மற்றும் ஒரு மனையின் பத்திரத்தை காவல்

நிலையம் மூலம் கொடுத்து எனது மகளின் கணவரிடம் ஓர் உறுதிமொழி ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டுள்ளார்.

5. மேற்படி உறுதி மொழி ஆவணம் 08.10.2022 அன்று ஏற்படுத்தப்பட்ட S. கோபாலகிருஷ்ணன் என்ற நோட்ரி பப்ளிக்கிடம் முறையாக பூர்த்தி செய்யாமல் 08.10.2022 ACP சம்மனை நீற்த்து போகும் வகையில் செயல்பட்டு 20.10.2022ல் மண்ணார்குடி காவல் நிலையத்தில் வைத்து எங்களிடம் தனித்தனியாக வாரிசுகளான கதிர்வேல். வெங்கடேசன் மற்றும் ஜலத்குமாரி ஆகியோர்களிடம் கொடுத்தும் கையெழுத்து பெற்ற நிலையில் எனது மகள் உறுதி மொழி ஆவணம் முழுவதும் தவறான வகையில் எந்தவிதமான தொடர்பும் இல்லாத ஆவண எண்கள் குறிப்பிடப்பட்டு ஆனால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் உண்மையானதாகும். எனது மகள் காவல் நிலைய ஆய்வாளரிடம் 08.10.2022ல் எழுதப்பட்ட ஆவணத்திற்கு 20.10.2022 அன்று கையெழுத்து வாங்கிய நிலையில் எனது மகள் மேற்படி ஆவணத்தை 20.10.2022 அன்று தேதி மாற்றம் செய்தார். மேற்படி தேதி மாற்றமானது சம்பந்தப்பட்ட நோட்ரி பப்ளிக்கார் கையெழுத்தில்லாமல் அவர்களே தேதியை திருத்தி எனது மகள் சாட்சியாக கையெழுத்திட்டு 20.10.2022 என கையெழுத்து செய்துள்ளார்.

(போதிய நேரமின்மை காரணமாக வழக்கானது மறு தேதியிட்டு ஒத்திவைக்கப்படுகிறது).

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்